ஸ்ரீ



ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
Sri Krishna Jayanthi

அட்டவணை Index | **பக்கம் Page**

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி வரும் தேதி 2
Sri Krishna Jayanthi falling Date

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி வழிபாடு முறை 3
Sri Krishna Jayanthi Pooja Method

நாலாயிரதிவ்ய பிரபந்தத்தில் கண்ணன் -விளக்க உரை 4
Sri Krishna in NalayiraDivya Prabandam

பண்டைய தமிழ் நாட்டில் கண்ணன் வழிபாடு 8
Sri Krishna worship in Tamil Nadu(Olden Days)

பழந்தமிழில் மாயோன் தொன் மம் - வளர்ச்சியும் சுழற்சியும் 8
சு. சந்திரா – தமிழ் ஆராய்சியாளர்
Sri Krishna and Tamil Literature

When is Janmashtami? 11

Chronology of Events in Lord Krishna's Life (Traditional Calculation) 12
தொல்லியல் - கிருஷ்ணரின் அவதார காலமும் துவாரகை அகழ்வாய்வும்
ஆய்வுக்கட்டுரை

கோகுலாஷ்டமி பட்சணங்கள் மற்றும் செய்முறைகள் 17
Sri Gokulashtami- Sweets and savouries

திரை இசையில், கர்நாடக இசையில் சில கண்ணன் பாடல்கள் 19
ச.சண்முகம்
Sri Krishna – Classical Music and Cinematography

கிருஷ்ண ஜெயந்தி கோலங்கள் 26
Sri Krishna Jayanthi – Kolam - Rangoli

நமது அன் மை பகுதி மற்றும் வெளிநாடுகளில் வழிபாடு 27
Sri Krishna Jayanthi celebration in and around

ஸ்ரீ கிருஷ்ண அஷ்டோத்திரம், சர்வ காயத்ரி 28
Sri Krishna Ashtothram, Sarva Gayatri

www.prohithar.com

ॐ
Balu Saravana Sarma
Prohithar – Astrologer
No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677
Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

இவ்வருடம் கோகுலாஷ்டமி – ஜென் மாஷ்டமி என் று வருகிறது?

When is Janmashtami? - Chronology of Events in Lord Krishna's Life

இவ்வருடம் கோகுலாஷ்டமி 3 நாட்களில் வருகிறது இதில் எந்த நாளில் வழிபடுவது என்கிற ஒரு விடையை இங்கு தருகிறேன் .

அஷ்டமி திதி – துவக்கம்: 13.8.2009 வியாழன் காலை 9:25 **முடிவு: 14.8.2009 வெள்ளி காலை 7:58**
ரோகினி நட்சத்திரம் – துவக்கம்: 14.8.2009 வெள்ளி இரவு 7:53 **முடிவு: 15.8.2009 சனி இரவு 6:43**



õ¬óè¬ô ð£½.êóõ í ¡ «ïó‹: ªê¡¬ù: õ£‚Aò º¬ø ð…ê£ƒè‹

ஜென் மாஷ்டமி என் பது சைவ-வைணவ வழிபாடு ஆகும், அதில் 4 பிரதான முறைகள் உள்ளன அவற்றின் சூத்திரப்படிதான் ஜென் மாஷ்டமி நாளை கணணம் செய்து, நிர்ணயித்து கடைபிடிக்க வேண்டும்

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் திருக்கோவில் வழிபாடுகள் ஆரியபட்டீயம், சூர்ய சித்தாந்த, வாக்கிய பஞ்சாங்க முறைப்படிதான் கடைபிடிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் திதி, நட்சத்திரம் கணணம் செய்து ஜென் மாஷ்டமி சூத்திரத்தை உபயோகித்து வைணவ முறைகளான வைகானஸம், பாஞ்சாரத்திர வழிகளுக்கு ஏற்ப ஸ்ரீகோகுலாஷ்டமியை தீர்மானிக்க வேண்டும்.

பகவான் கிருஷ்ணன் பிறப்பு:

சரியாக 5227 வருடங்களுக்கு முன் னர் அதாவது கிறுஸ்து பிறப்பதற்கு முன் 19 ஜூலை 3228 ஆண்டு அவதரித்தார்

அப்பொழுது சூர்ய சித்தாந்தப்படி, சாந்திரமான(சந்திரமாதம்) முறை சிராவண மாதம் பகுள அஷ்டமி திதி(சிராவண மாஸம் தேய்பிறை எட்டாம்நாள்) அன் று நள்ளிரவு ரிஷப லக்னத்தில் ரிஷப ராசியில் சந்திரன் ரோகினி நட்சத்திரத்தில் இருக்கும் காலத்தில் அவர் பிறந்தார்

கிருஷ்ணரின் வாழ்ந்த காலஅளவியல் கணக்கீடில் இருவேறு கருத்துக்கள் உள்ளன, மேலும் கால கணித அளவியலில் மஹாபாரதம் அடிப்படையில் சற்று வித்தியாசம் ஏற்படுகிறது. மேலும் விபரம் இக்கட்டுரையின் இறுதியில் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது

துவாரகை பகுதி கடல் அகழ்வாரய்ச்சியில் கிருஷ்ணனின் கால நகரகட்டிடங்கள் பற்றிய பல உண்மைகள் தெரியவந்துள்ளன அந்த தகவல்களின் இணைய இணைப்புகளும் இம்மடலின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

3228 BC - Descension of Bhagwan Krishn

According to the "Surya Siddhant" the astrologers have calculated that kaliyug started on the afternoon of 17th February, 3102 BC. In the Bhagwatam, Brahma tells in round figures that Krishn remained on this earth planet for 125 years

(यदुवंशेऽवतीर्णस्य भवतः पुरुषोत्तम। शरच्छतं व्यतीयाय पञ्चविंशाधिकं प्रभो ॥ 11/6/25).

Accordingly, if 125 years is added to February, 3102, it comes to February 3227 BC. But Krishn's descension was in the Rohini *nakcÝhatra* (asterism) of the 8th waning moon midnight of *bhadon* (August) which is about seven months earlier. Thus, **His descension date is 3228 BC** and He stayed on the earth planet for 125 years and about 7 months.

விதிகள்(சூத்திரம்):

ஒவ்வொரு பண்டிகைக்கும் நிர்ணய விதி உள்ளது அதபோல கோகுலாஷ்டமியில் விதிகள் கீழ்கண்டவாறு

கோகுலாஷ்டமி - வியாழன் 13 ஆகஸ்ட் 2009 (Gokulashtami Thursday 13th Aug 2009)

"சிராவண மாஸ பகுள அஷ்டமி பிரதானம்

பொருள்: சிரவணம் (ஆவணி) சந்திர மாஸம் தேய்பிறை எட்டாம் நாள் முக்கியம்

ஜெயந்தி - வியாழன் 13 ஆகஸ்ட் 2009 (Jayanthi Thursday 13th Aug 2009)

சிராவண மாஸ பகுள அஷ்டமி ரோகினி, ஹரிஷணநாம யோகமும்

பொருள்: ஆவணி சந்திர மாஸம் தேய்பிறை எட்டாம் நாளும் ரோகினி நட்சத்திரமும், ஹரிஷண யோகமும் சேர்ந்தால் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி ஆகும்

வைகாநாஸ ஜெயந்தி – வெள்ளி 14 ஆகஸ்ட் 2009 (Vaiganasa Jayanthi Thursday 14th Aug 2009)

சிராவண மாஸ பகுள அஷ்டமி ரோகினி, முன் திதி, நட்சத்திர வேதை இருக்க கூடாது

பொருள்: ஆவணி (சந்திர மாஸம்) தேய்பிறை எட்டாம் நாளும் ரோகினி நட்சத்திரமும் சேர்ந்து இருக்கும் பொழுது அஷ்டமி திதி ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி ஆகும்

பஞ்சாரத்திர, வைஷ்ணவ ஜெயந்தி - வெள்ளி 14 ஆகஸ்ட் 2009 (Pancharatra, Vaishnav Jayanthi Thursday 14th Aug 2009)

ரோகினி, அஷ்டமி வேதையில்லாமல் சுத்தமாக இருந்தல் கிராக்கியம், அஷ்டமி, ரோகினியின் முடிவு சூரிய உதயத்தின் பின் 2 நாழிகைக்குள் இருப்பின் அன்று தான் வைஷ்ணவ ஜெயந்தி

குறிப்பாக ரிஷப லக்னம் முக்கியமானதாகும்

கிருஷ்ண ஜெயந்தி வழிபாடு முறை

வாசலில் வண்ணக்கோலம் இட்டு, வீட்டில் பூஜை அறையில் எட்டு இதழ் தாமரைக்கோலம் இட்டு அதன் மேல் பால கிருஷ்ணன் சிலையை வைத்து அழகு படுத்தி, பழங்கள், தின் பண்டங்களை வைத்து இறைவனின் திருநாமங்களை ஸ்தோத்திரம் செய்து, மனதை ஒருமைப்படுத்தி பிராத்தனை செய்து தீபாராதனை காட்டுவது, இல்லம் முழுவதும் தூபம் போடுவது தான் பொதுவான வழிபாடாகும்.

இதைத்தவிர பல விதமான வழிபாட்டு முறைகள் உள்ளதால் குறிப்பிட்ட வழிபாட்டு முறைதான் சரி என்றும், அதைத்தான் கடைபிடிக்க வேண்டும் என்பது சரியல்ல, எனவே தங்களின் குல வழக்கப்படி, சுற்றுப்புறத்தார் மரபுப்படி வழிபடுதல் நன்று.

வழிபாட்டு முறைகள் வேறானாலும், இறைவனை அடைவது என்கிற நோக்கம் ஒன்றேதான் !

நல்ல மக்கட்செல்வம், அறிவு, ஆற்றல், நீதி, நேர்மை, கொடை எண்ணம் ஆகிய வற்றை முன்நிறுத்தியை கிருஷ்ண ஜெயந்தி வழிபாடு நடத்தப்படுகிறது.

இறைவனின் திருநாமங்களை உச்சரித்தும், மனதால் தியானித்தும், மேற்படி நன்னாளில் நம்மால் இயன்றளவு ஆதரவற்றோர் இல்லங்களுக்கு உதவி செய்தும் இறைவனை வழிபடலாம்.

நம்பகுதியில் வசிக்கும் குழந்தைகளுக்கு பலவிதமான கலைப்போட்டிகளை நடத்தி அவர்களின் திறமைகளை வெளிக்கொணரலாம்.

பெண்களுக்கு கோலம்(ரங்கோலி) போட்டி, உணவுப்போட்டி, மெஹந்திப்போட்டி மற்றும் அவர்களின் திறன்களை மதிக்கும் வகையில் கலைப்போட்டிகளை நடத்துவதும் வழிபாடுதான் !

www.prohithar.com

நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் கண்ணன்

பெரியாழ்வார் திருமொழி 1.1:

பாசுரம் 1

வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிட
கண்ணன் முற்றம் கலந்தளறாயிற்றே

அழகு பொருந்திய மாடங்கள் நிறைந்த திருக்கோட்டியூரில் வாழும் கண்ணன் கேசவன் நம்பி திருவாய்ப்பாடியிலே நந்தகோபரின் இனிய இல்லத்திலே பிறந்த போது, அவன் பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் முகத்தால் ஆயர்கள் ஒருவர் மீது பூசிய நறுமண எண்ணெயாலும் ஒருவர் மீது ஒருவர் தூவிய வண்ண வண்ணச் சுண்ணப் பொடிகளாலும் கண்ணனின் வீட்டுத் திருமுற்றம் எண்ணெயும் சுண்ணமும் கலந்து சேறானது.

இந்தப் பாசுரத்தில் கண்ணனை அறிமுகம் செய்யும் போது கண்ணன், கேசவன், நம்பி என்ற மூன்று பெயர்களைச் சொல்கிறார். அழகிய கண்களை உடையவன், கண்ணைப் போன்றவன், கண்களுக்கு விருந்தானவன், அழகிய திருமுடிக்கற்றைகளை உடையவன், கேசியை அழித்தவன், நற்குணங்களால் நிறைந்தவன், அழகன் போன்ற எல்லா பொருளையும் ஒரே நேரத்தில் அழகுபடச் சொல்லிச் செல்கிறார். கண்ணன் அவதரித்ததால் நந்தகோபருடைய இல்லை இனிய இல்லமானது. கண்ணன் பிறந்த பின்னர் நந்தகோபர் தன் இல்லத்தின் தலைவனாக கண்ணனைக் கொண்டான் என்பதால் நந்தகோபர் திருமாளிகையின் திருமுற்றத்தை கண்ணன் முற்றம் என்றார். செம்புலப்பெயல்நீர் என்பார் தமிழ்ப்புலவர். அதே போல் இங்கே எண்ணெயும் சுண்ணமும் கலந்து சேறாகிக் கிடக்கிறது. ஆழ்வாருடைய காலத்திலும் கண்ணனுடைய காலத்திலும் மகிழ்ச்சியைத் தெரிவிக்க எண்ணையை ஒருவர் மீது ஒருவர் பூசிக்கொண்டும் வண்ணச் சுண்ணப்பொடிகளை ஒருவர் மீது ஒருவர் தூவிக்கொண்டும் மகிழ்ந்திருக்கிறார்கள். இன்றைக்கும் ஹோலிப் பண்டிகையில் வண்ணப்பொடிகளைத் தூவியும் நீரில் கரைத்துத் தெளித்தும் மகிழ்கிறார்களே.

பாசுரம் 2.

ஓடுவார் விழுவார் உகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரான் எங்குற்றான் என்பார்
பாடுவார்களும் பல்பறை கொட்ட நின்று
ஆடுவார்களும் ஆயிற்று ஆய்ப்பாடியே

திருவாய்ப்பாடியிலிருக்கும் மக்கள் எல்லோரும் தங்கள் தலைவரான நந்தகோபருக்குத் திருக்குமரன் பிறந்ததைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சி பெருகி தாம் செய்வது என்ன என்றே புரியாமல் சிலர் ஓடினார்கள்; சிலர் எண்ணெயும் சுண்ணமும் கலந்த திருமுற்றத்துச் சேற்றில் வழுக்கி விழுந்தார்கள்; சிலர் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக உரக்கக் கூவினார்கள்; ஒருவரை மற்றவர் கட்டித் தழுவினார்கள்; நம் தலைவனான கண்ணன் எங்கே இருக்கிறான் என்று கூறிக் கொண்டு அவனை தேடினார்கள் சிலர்; சிலர் இனிய குரலில் பாடினார்கள்; சிலர் பலவிதமான பறைகளை இசைத்து ஆடினார்கள். இப்படி கண்ணன் பிறந்த நேரத்தில் பெரும் திருவிழாவைப் போலிருந்தது திருவாய்ப்பாடி.

இந்தப் பாசுரத்தில் கண்ணனின் திருவவதாரத்தை ஆய்ப்பாடியில் வாழ்ந்த ஐந்து லட்சம் ஆயர்கள் எப்படி குதூகலமாகவும் கோலாகலமாகவும் கொண்டாடினார்கள் என்பதைச் சொல்கிறார் பட்டர்பிரான். கிருஷ்ண ஜனனத்தால் மகிழ்ச்சியுறாதவர்கள் எவருமில்லை திருவாய்ப்பாடியிலே. ஆலிப்பார் என்பதற்கு உரக்கக் கூவுதல், ஆலிங்கனம் (கட்டித் தழுவுதல்) என்று இரு பொருளைச் சொல்கின்றனர் பெரியோர்.

பாசுரம் 3.

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்
காணத் தாம் புகுவார் புக்குப் போதுவார்
ஆணொப்பார் இவன் நேரில்லை காண்
திருவோணத்தான் உலகாளும் என்பார்களே

எல்லா சீர்களையும் உடைய இந்த சிறு பிள்ளை கம்சனைப் போன்றவர்களிடம் இருந்து மறைந்து வளர்வதற்காக அந்தப் பெருமைகளை எல்லாம் பேணி/மறைத்து நந்தகோபர் இல்லத்தில் பிறந்தான். அப்போது அவனைக் காண்பதற்காக எல்லா ஆயர்களும் ஆய்ச்சியர்களும் திருமாளிகைக்குள் புகுவார்கள்களும் உள்ளே புகுந்து அவனைக் கண்டு வெளியே வருபவர்களுமாக இருக்கிறார்கள். புகுபவர்களும் புக்குப் போதுபவர்களும் ஒருவருக்கொருவர் கண்ணனின் பெருமைகளைப்

www.prohithar.com

பேசிக் கொள்கிறார்கள். 'இவனைப் போன்ற அழகுடைய ஆண்மகன் வேறு யாரும் இல்லை. இவன் திருவோணத்தானாகிய திருமாலால் அளக்கப்பட்ட மூவுலகங்களையும் ஆள்வான்' என்று சொல்கிறார்கள்.

இந்தப் பாசுரத்தில் கண்ணனின் பெருமைகளை திருவாய்ப்பாடி வாழ் மக்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டதைச் சொல்கிறார். பேணிச் சீருடை என்ற சொற்றொடருக்கு 'பேணுவதற்கு உரிய சீர்களை உடைய' என்று பொருள் கொண்டாலும் பொருத்தமே. திருவோணத்தான் உலகாளும் என்ற சொற்றொடருக்கு 'திருவோணத்தானாகிய திருமாலின் உலகங்களை ஆளுவான்' என்று பொருள் கொண்டாலும் சரி தான்; 'இவன் திருவோணத்தானாகிய திருமாலே. இவன் உலகங்களை எல்லாம் ஆளுவான்' என்று பொருள் கொண்டாலும் சரியே.

பாசுரம் 4.

உறியை முற்றத்து உருட்டி நின்றாடுவார்
நறுநெய் பால் தயிர் நன்றாகத் தூவுவார்
செறி மென் கூந்தல் அவிழத் திளைத்து எங்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடி ஆயரே

பால் தயிர் நெய் முதலானவை வைத்திருந்த உறிகளை எடுத்து வந்து கண்ணனின் திருமாளிகை முற்றத்தில் உருட்டி உருட்டி தங்கள் மனம் போன படி ஆடுகின்றார்கள் சிலர். நறுமணம் மிக்க நெய், பால், தயிர் மூன்றையும் எல்லா இடங்களிலும் தூவுகின்றார்கள் சிலர். நெருக்கமாக வளர்ந்து மென்மையாக இருக்கும் கூந்தல் அவிழ்ந்ததும் தெரியாமல் மனம் ஆழ்ந்து திளைத்து ஆடுகின்றார்கள் சிலர். இப்படி நல்லது கெட்டது பிரித்தறியும் அறிவினை கண்ணன் பிறந்த மகிழ்ச்சியில் இழந்து திருவாய்ப்பாடி முழுவதும் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் இந்த ஆயர்கள்.

நெய், பால், தயிர் போன்றவற்றை மகிழ்ச்சியின் மிகுதியால் முற்றமெங்கும் தூவினார்கள் என்பதொரு பொருள். கண்ணனுக்கு நன்மை உண்டாகும் பொருட்டு (நன்று ஆக) எல்லாவற்றையும் எல்லோருக்கும் தானமாகக் கொடுத்தார்கள் என்று இன்னொரு பொருளைச் சொல்கிறார்கள் பெரியவர்கள்.

பாசுரம் 5.

கொண்ட தாள் உறி கோலக் கொடு மழு
தண்டினர் பறி ஓலைச் சயனத்தர்
விண்ட முல்லை அரும்பன்ன பல்லினர்
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினார்

இந்த இடையர்கள் தாங்கி வந்த உறிகள் அவர்கள் கால்களைத் தொடுமளவிற்கு இருக்கின்றன. அவர்களது ஆயுதங்களான அழகிய கூர்மையான மழுவையும் மாடு மேய்க்கும் கோல்களையும் ஏந்தி வந்திருக்கின்றனர். பனைமரத்திலிருந்து பறித்து எடுத்த ஓலையால் செய்த பாயை இரவில் படுக்கப் பயன்படுத்திவிட்டு அதனையும் எடுத்துக் கொண்டு வந்திருக்கின்றனர். பறித்தெடுத்த முல்லை அரும்பு போன்ற வெண்மையான பற்களைக் கொண்டிருக்கின்றனர். அப்படிப்பட்ட இடையர்கள் நெருக்கமாகக் கூடி கண்ணன் பிறந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் முகமாக நெய்யால் ஆடினார்கள்.

மாடு மேய்க்கப் போன இடத்தில் பால் கறக்க நேர்ந்ததால் அந்த பாலை இட்டு வைத்த உறியையும் தாங்கி வந்திருக்கின்றனர். அந்த உறிகளைக் காவடி போல் ஏந்தி வந்தார்கள் போலும். அப்படி ஏந்தி வந்த உறிக்காவடி அவர்களது தாள்களை/கால்களைத் தொடுமளவிற்கு இருக்கின்றன. இலை தழைகளைப் பறித்து மாடுகளுக்கு இடுவதற்காக சிறிய மழுவாயுதத்தைத் தாங்கி வருகிறார்கள். மாடுகளை மேய்க்கும் கோல்களையும் தாங்கி வருகின்றார்கள். எந்த வித கெட்ட பழக்கங்களும் இல்லாததால் அவர்களது பற்கள் வெண்மையான முல்லை அரும்புகளைப் போல் இருக்கின்றன. கண்ணன் பிறந்த மகிழ்ச்சியில் எண்ணெய் தேய்த்து நீராடியதை நெய்யாடினார் என்று சொல்வதாகக் கூறினாலும் பொருத்தமே.

இராக்காவல் முடிந்து வந்தார்கள் என்பது பெரியோர்கள் சொன்ன பொருள். அதிகாலையில் மாடு மேய்க்கச் செல்பவர்கள் கண்ணன் பிறந்த செய்தியைக் கேட்டு வந்து மகிழ்ந்து நெய்யாடினார்கள் என்றாலும் பொருத்தமே.

இங்கே அண்டர் என்று சொன்னது அண்டத்தில் வாழும் தேவர்களை என்றொரு கருத்தும் இருக்கிறது. ஆனால் இங்கே விளக்கியிருக்கும் செயல்களைச் செய்பவர்கள் இடையர்களாக இருக்கவே வாய்ப்புள்ளதாலும் முன்பின் வரும் பாசுரங்கள் இடைச்சேரியைப் பற்றியே பேசுவதாலும் அண்டர் என்றது ஆயர்களையே எனலாம்.

பாசுரம் 6.

கையும் காலும் நிமிர்த்துக் கடார நீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நா வழித்தாளுக்கு அங்காந்திட

வையம் ஏழும் கண்டாள் பிள்ளை வாயுளே

கண்ணனாகிய குழந்தையின் கையையும் காலையும் நீட்டி நிமிர்த்து, பெரிய பானையிலே நறுமணப்பொருட்களுடன் காய்ச்சப்பட்ட வெந்நீரைக் கொண்டு மென்மையாக குழந்தையை நீராட்டி, மென்மையான சிறிய மஞ்சள் கிழங்காலே குழந்தையின் நாக்கை வழிக்கும் போது அப்போது அங்காந்த (திறந்த, ஆ காட்டிய) திருவாயின் உள்ளே வையம் ஏழும் கண்டாள் யசோதைப் பிராட்டியார். ஆகா. என்ன விந்தை!

இன்றைக்கும் சிறு குழந்தையைக் குளிப்பாட்டும் போது தாய்மார்கள் கால்களை நீட்டி அமர்ந்து குழந்தையை முழந்தாள் மூட்டின் மேல் வைத்துக் குளிப்பாட்டுகிறார்கள். அப்போது குழந்தைக்கு சிறிதும் அதிர்ச்சி ஏற்படாத வண்ணம் சிறிதே வெம்மையான நீரை பையப் பைய ஊற்றி நீராட்டுகிறார்கள். அன்றைக்கும் அசோதைப் பிராட்டியார் தன் சிறு குழந்தையாம் இளஞ்சிங்கத்தை அப்படித் தான் நீராட்டியிருக்கிறாள். குழந்தையின் கையும் காலும் நன்கு செயல்படுவதற்காக அவற்றை நீட்டி நிமிர்த்துவதும் இன்றைக்கும் தாய்மார்கள் செய்வதே (சில இல்லங்களில் பாட்டிமார்கள் செய்கிறார்கள்). அப்படி கையும் காலும் நீட்டி நிமிர்த்திய பின் கடார நீரால் கண்ணக் குழந்தையை நீராட்டி அவனது நாக்கை வழிப்பதற்காக வாயை திறந்த போது அங்கே ஏழுலகையும் கண்டு வியந்து போனாள். ஐய என்ற சொல்லால் அந்த வியப்பைக் குறிக்கிறார் ஆழ்வார்.

மண்ணெடுத்து உண்டதால் அண்ணனால் தடுக்கப் பட்டு அன்னையால் ஆராயப்படும் போது வாயுள் ஏழுலகம் காட்டினான் என்றே இதுவரை படித்தும் கேட்டும் இருக்கிறோம். ஆழ்வார் அந்த நிகழ்வை இன்னும் விரைவாக்கி பிறந்த சில நாட்களிலேயே நடப்பதாகக் கூறுகிறார்.

பாசுரம் 7.

வாயுள் வையகம் கண்ட மடநல்லார்
ஆயர் புத்திரன் அல்லன் அருந்தெய்வம்
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்
மாயனென்று மகிழ்ந்தனர் மாதரே

கண்ணனின் திருவாயுனுள் எல்லா உலகங்களையும் கண்ட யசோதைப் பிராட்டியும் மற்ற ஆய்ச்சியர்களும் மிகவும் வியந்து 'ஆயர்களின் பிள்ளை இல்லை இவன். பெறுதற்கரிய தெய்வமே இவன். பரந்த புகழையும் சிறந்த பண்புகளையும் உடைய இந்த பாலகன் எல்லா உலகங்களையும் மயக்கும் அந்த மாயனே' என்று ஒருவருக்கொருவர் சொல்லி மகிழ்ந்தனர்.

கண்ணனுடைய திருவருளால் தெய்வீகக் கண் பெற்ற யசோதைப் பிராட்டியார் கண்ணனின் திருவாயுனுள் ஏழுகலங்களையும் கண்டு வியந்து மற்ற ஆய்ச்சியர்களையும் அழைத்துக் காண்பித்தாள். கண்ணன் அவர்களுக்கும் திருவருள் செய்து தெய்வீகக் கண்களைக் கொடுக்க அவர்களும் அவன் திருவாயுனுள் உலகங்களைக் கண்டு வியந்தனர். வியந்து 'இவன் இடைப்பிள்ளை இல்லை; ஏழுலகங்களையும் மயக்கும் மாயனே' என்று சொல்லி மகிழ்ந்தனர்.

பாசுரம் 8.

பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்
எத்திசையும் சயமரம் கோடித்து
மத்தமாமலை தாங்கிய மைந்தனை
உத்தானம் செய்து உகந்தனர் ஆயரே

கண்ணன் பிறந்து பன்னிரண்டாம் நாள் அந்தக் குழந்தைக்கு பெயர்சூட்டு விழா நடக்கிறது. அந்தத் திருவிழாவிற்காக எல்லா திசைகளிலும் கொடிகளும் தோரணங்களும் தாங்கிய வெற்றித் தூண்கள் நடப்பட்டிருக்கின்றன. அந்தத் திருவிழாவில் யானைகள் நிறைந்த கோவர்ந்தன மலையைத் தாங்கிய மைந்தனாம் கோபாலனை கைத்தலங்களில் வைத்துக்கொண்டு மகிழ்ந்தனர் ஆயர்கள்.

குழந்தை பிறந்து பத்தாம் நாளிலோ பன்னிரண்டாம் நாளிலோ ஏதோ ஒரு நல்ல நாளில் பெயர் சூட வேண்டும் என்று சொல்கின்றன சாத்திரங்கள். அதனை ஒட்டி பன்னிரண்டாம் நாள் அன்று எல்லாத் திசைகளிலும் தோரணங்களையும் கொடிகளையும் நாட்டிக் கொண்டாடுகின்றனர் ஆயர்கள். இங்கே ஆயர்கள் என்றது ஆண் பெண் இருபாலரையும்.

தங்கள் கைகளில் வைத்துக் கொண்டாடினர் என்று சொன்னாலும் தகும். உத்தானம் என்று சொன்னதால் தலை மேல் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடினர் என்றாலும் சரியே.

கோவர்த்தன மலையைத் தூக்கிய நிகழ்ச்சி பிற்காலத்தில் நடந்திருந்தாலும் அந்த நிகழ்ச்சி நடந்ததற்கு பின்னர் வாழ்ந்தவர் ஆழ்வார் என்பதால் அதனை இங்கே நினைத்துக் கொண்டார் என்பதில் குறையில்லை. திருவாய்ப்பாடியில் நடந்ததை திருக்கோட்டியூருக்குக் கொண்டு வந்ததைப் போல் பின்னர் நடந்ததை முன்னரே நினைத்துக் கொண்டார் போலும்.

பாசுரம் 9.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய்

'கண்ணனைத் தொட்டிலில் உறங்குவதற்காக இட்டால் அந்தத் தொட்டில் கிழிந்து போகும்படி உதைக்கிறான் . கையில் எடுத்துக் கொண்டாலோ இடுப்பை முறிக்கும் அளவிற்கு ஆடுகிறான் . இறுக்கி அணைத்துக் கொண்டால் வயிற்றின் மேல் பாய்கிறான் . தேவையான வலிமை இல்லாததால் நான் மிகவும் மெலிந்தேன் பெண்ணே' என்று யசோதைப் பிராட்டியார் தோழியிடம் முறையிடுகிறார்.

இங்கே மிடுக்கிலாமையால் என்றது யசோதையாகிய தன்னை என்றும் கிருஷ்ணக் குழந்தையை என்றும் இருவிதமாகப் பெரியோர்கள் பொருள் சொல்லியிருக்கிறார்கள். பிறந்து பன்னிரண்டே நாட்கள் பிஞ்சினைப் பற்றி கூறுவதால் குழந்தையின் மென்மையை மிடுக்கிலாமை என்றார். சிறிதே வளர்ந்த குழந்தையைப் பற்றி யசோதையார் கூறினார் என்றால் அது தன்னைக் கூறினார் என்னிலும் தகும். இன்றைக்கும் தமது குழவியரைப் பற்றி தாயர் இந்தக் குறையைக் கூறி மெச்சிக் கொள்வதைக் கேட்கிறோமே.

பாசுரம் 10.

செந்நெலார் வயல்சூழ் திருக்கோட்டியூர்
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை
மின்னு நூல் விட்டுசித்தன் விரித்தயிப்
பன்னுபாடவல்லார்க்கு இல்லை பாவமே

செந்நெல் ஆர்க்கும் வயல்கள் சூழ்ந்த திருக்கோட்டியூரில் நிலைத்து வாழும் எல்லா கல்யாண குணங்களும் நிரம்பிய நாரணன் திருவாய்ப்பாடியில் பிறந்த சரிதத்தை திருமார்பில் முப்புரி நூல் மின்னும்படியாகத் திகழும் விஷ்ணுசித்தர் விவரித்துச் சொன்ன இந்தப் பாடல்களை மீண்டும் மீண்டும் பாடுபவர்களுக்கு இறைவனைச் சிந்திக்கவும் அடையவும் தடையாக நிற்கும் பாவங்கள் நீங்கும்.

செந்நெல் ஆர்க்கும் என்றதனால் இம்மைப்பயன்கள் குறைவின்றி விளங்குவதைக் காட்டினார். மன்னு என்று என்றும் நிலைத்து வாழ்வதைக் கூறியதால் அர்ச்சாவதாரத்தின் குறைவில்லாப் பெருங்குணத்தைக் காட்டினார். நாரணன் என்று சொன்னதால் எவ்விடத்தும் எவ்வுயிரிலும் வாழ்பவன் என்பதையும் எவ்விடமும் எவ்வுயிரும் தன்னுள் கொண்டவன் என்பதையும் கூறினார். நம்பி என்றதால் அர்ச்சாவதாரத்தில் மிக வெளிப்படையாக நிற்கும் பெருங்குணமான சௌலப்யத்தை / நீர்மையைக் காட்டினார். இல்லை பாவமே என்றதனால் கைங்கர்ய விரோதிகளான பாவங்கள் நீங்கினபடியைக் கூறினார்.

இல்லங்களில் திவ்ய பிரபந்தம் இல்லாதவர்கள் இணையதளங்களில் சென்று ஒலி, எழுத்து வடிவில் தரவிறக்கம் செய்யலாம்

இதற்கான இணைய தளங்கள்

http://www.andavan.org

http://www.srirangapriya.net

http://www.sundarasimham.org

http://www.srivaishnavam.com

http://www.prapatti.com

http://www.ahobilamutt.org

பண்டைய தமிழ்நாட்டில் கண்ணன் வழிபாடு

வேத காலத்தில் இருந்து , வழிப்பட்டு வரப்படும் ஒரு வழிமுறை தான் , நாராயண வழி பாடு ! வேதத்தில் நாராயண சூக்தம் என்ற பகுதி ஒன்று உள்ளது. அதில்

"நாராயண பரோ த்யாதா த்யானம் நாராயண: பர:"

முடிவாக தியானிக்கத் தக்கவன் நாராயணனே. நாராயண தியானம் தான் ஒப்பற்றது என்கிறது

.

திருமால் வழிபாடு தமிழ் மக்களிடையே தொன்று தொட்டு வழங்கி வந்தமைக்கு தொல்காப்பியம் சான்று பகர்கின்றது. இது சங்க காலம் முதலே இருந்து வந்துள்ளது .

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும் - என்கிறார் தொல்காப்பியர்.

ஆனால் அப்போதெல்லாம் எந்த தத்துவ வேறு பாடு இல்லை .வேத நெறி மட்டுமே .

முல்லை நிலக்கடவுள் மாயோன் என்பதை தொல்காப்பியம் சொல்கின்றது. முல்லை நிலத்தின் கருப்பொருளும் உரிப்பொருளும் கண்ணனுக்குப் பொருந்தி வருகின்றது. .சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல், பூவை நிலைத் துறை போன்ற இலக்கண இலக்கிய செய்திகளிலும் காணலாம்

ஆரியத்தின் வருகைக்குப் பின்னர் ஆரியம் தமிழ்நெறியோடு செய்து கொண்ட உடன்பாடே மாயோனும் விஷ்ணுவும் இணைந்தது; சேயோனும் ஸ்கந்தனும் இணைந்தது; வாலியோனும் பலராமனும் இணைந்தது என்றெல்லாம் பலரும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களைப் பார்த்தால் அவர்கள் சொல்லும் ஆரியம் வருவதற்கு முன்னரே தமிழ்நெறியில் ஸ்கந்தனுக்கு உரியவை, விஷ்ணுவுக்கு உரியவை, பலராமனுக்கு உரியவை என்று அவர்கள் வகுக்கும் செய்திகள் இருக்கின்றன

துவரைப்பதியிலிருந்து வந்த மன்னர் குடியினர் வேளிர்கள் என்று சங்க இலக்கியங்களில் குறிப்புகள் இருக்கின்றன. துவரைப்பதி என்றால் கண்ணன் ஆண்ட துவாரகையைக் குறிப்பதாகச் சிலரும் கருநாடகத்தில் இருக்கும் துவாரசமுத்திரத்தைக் குறிப்பதாகச் சிலரும் சொல்கிறார்கள். மூவேந்தர்களில் பாண்டியர்கள் மூத்த குடியினர் என்பது உனக்குத் தெரியும். பாண்டியர்களுக்கு இணையான தொன்மையுடன் இருப்பவர்களாக வேளிரையும் இலக்கியத் தரவுகள் சுட்டுகின்றன. அவர்கள் வடக்கிலிருந்து தெற்கே வரும் போது சில தொன்மங்களைக் கொண்டு வந்திருக்கலாம். அல்லது துவாரகையை ஆண்ட யாதவ குலத்தவர்கள் தமிழர்களாகவே இருக்கலாம். அப்படி இருந்தால் இந்தத் தொன்மங்கள் எல்லாம் தமிழர்களுடையதாகவே இருந்து ஆரியத்தில் பின்பு கலந்திருக்கலாம். என்றைக்கு ஆரியத் தொடர்பு ஏற்பட்டது, அது நிகழ்ந்த இடம் வடபுலமா தென்னகமா என்றெல்லாம் இன்னும் நுணுகிப் பார்க்கவேண்டும். ஆர்வமும் நேரமும் இருந்தால் இறங்கி ஆய்வு செய்யலாம்.

பழந்தமிழில் மாயோன் தொன்மம் - வளர்ச்சியும் சுழற்சியும்

சு. சந்திரா – தமிழ் ஆராய்சியாளர்

காடுறை கடவுளாகப் போற்றப்படுபவன் மாயோன். இயற்கை யுருவினாக உருவான மாயோன் பற்றிய தொன்மக் குறிப்புகள் கதைக் கூறு உடையனவாய் உள்ளன. பண்பாட்டுக்கலப்புடன் வேதத்தில் குறிப்பிடப்படும் கிருஷ்ணனுடன் இணைந்து உள்ளன. தொன்மக் கதைகளாய் வளர்ந்துள்ளன. தத்துவநோக்கில் இயற்கையில் பரந்து சுழற்சி பெற்றுள்ளன. இதனை ஆய்வதே ஆய்வுரையின் நுவல் பொருளாகும்.

பழந்தமிழ் நூல்களில் மாயோன் :-

மாயோன் பற்றிய குறிப்புகள் பிற தெய்வங்களைவிட மிகுதியாகப் பழந்தமிழ் நூல்களில் பரவிக் கிடக்கின்றன. "தேயா விழுப்புகழ்த் தெய்வமாக" (கலி:103:76) உள்ள மாயோனைக் குறிக்கும் திருமால் எனும் சொல் பழந்தமிழில் யாங்கனும் குறிப்பிடப்படவில்லை.

குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, நெடுநல்வாடை, மலை படுகடாஆம் முதலிய பத்துப்பாட்டு நூல்களிலும் ஐங்குறுநூறு, குறுந்தொகை முதலிய எட்டுத்தொகை நூல்களிலும் மாயோன் பற்றிய தொன்மக் குறிப்புகள் இல்லை என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

மாயோன் : இயற்கையுரு:

www.prohithar.com

மாயோன் என்ற சொல் கரியநிறமுடையவன் என்ற பொருளைத் தருகின்றது.
மணிவரை அன்ன மாஅயோனே (புறம்.229) *மண்ணுறுதிருமணி* (புறம். 56:5)
நீலநிற உறவின் நெடியோன் (பெரும். 30.402) *இருள் மயங்கும் மேனியன்* (பரி.15:50) என இயற்கையுருவாக மாயோன் குறிப்பிடப்படுகின்றான் .
காய்மலர்ப் பூவை கடலை யிருண்மணி அவையைந்து முறழு மணிகிளர் மேனியை (பரி.13:42-43)
எனக் காயாம்பூ, கடல், நீலமணி என இயற்கையின் உரு, கடவுளாகச் சங்க இலக்கியத்தில் சுட்டப்படுகின்றது.
மாஅல்:- பெரிய எனும் பொருண்மை உடைய மாஅல் என்னும் பெயரும் மாயோனுக்கு உரியதாகப் பழந்தமிழ்ப் பாடல்களில் பயின்றுவரக் காண்கிறோம். முல்லை நிலக்காடுறைப் பகுதியின் நெடிய உருவினை மாயோனுக்கு ஏற்றி மாலாகக் கொள்ளும் முறையினைப்பத்துப்பாட்டின் பல இடங்களில் காணமுடிகிறது.

"மால்வரை நிவந்த சேணுயர் வெற்பு" (முருகு.12) *"மாயோன் அன்ன மால்வரைக்கவாஅன் "* (நற்.32:1) என நெடியோனாக மாஅல் உயருகின்றான் . மாயோன் :
முல்லை நிலக்கடவுள்:- அகன் ஐந்திணைக்கு உரிய நிலத்தினைக் கூறுமிடத்துத் தொல்காப்பியர், *மாயோன் மேய காடுறை உலகமும்* எனச்சுட்டுகிறார். காடுறை கடவுளாகச் சுட்டப்படும் மாயோன் காயம்பூ சூடினமையை, "பூவை விரிமலர் புரையும் மேனியை" (பரி.1:6-7) "பறவாப் பூவை பூவினோயே" (பரி.3:73) என்ற தொடர்கள் வெளிப்படுத்துகின்றன. காடுறை கடவுளான திருமால் கானகத்தின் நெடுமையையும் மாமை நிறத்தினையும் உடையோனாய் இருப்பதோடு அந்நிலத்திற்கு உரிய பெரும்பொழுதான கார்காலத்துக்கரிய மேகத்தின் நிறத்தினைப் பெற்று, காயாம்பூ சூடி முல்லை நிலக்கடவுளாக விளங்குவதனை உணர முடிகின்றது. இதனைத் "தங்கள் கண்ணுக்குப் பச்சைப்பசேல் எனக் காட்சி வழங்கிய காட்டின் இயற்கையழகை மால் என்று வழுத்தினர்" (திரு.வி.க. தமிழ்நூல்களில் பௌத்தம், ப.27) என்ற கருத்து அரண் செய்கிறது.இவ்வாறு மாயோன் அடர் கானகப் பசுமையின் இயற்கையழகில் முகிழ்த்த முல்லைக்கடவுளாக எழிலுறுகிறான் எனலாம்.

அகவாழ்வின் தலைவன் :

முல்லை நிலக் கடவுளாகிய மாயோனை, முல்லைநிலத் தலைவனோடு இயைத்தும் பாடும் மரபு பழந்தமிழில் பரந்து கிடக்கக் காணலாம்.

அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரம்செல மிதித்த மாஅல் போல
புன்தலை மடப்பிடி உண்இயர் அம்குழை
நெடுநிலை யாஅம் ஒற்றிநனைகவுள்
படி நிமிறு கடியும் களிறே தோழி (அகம். 59:5-10)

என ஆற்றியிருக்கும் தலைவிக்குத் தோழி தலைவன் செல்லும் வழியிடைக் காட்சி ஒன்றினைக் கூறி ஆற்றுவிக்கின்றாள். இக்கவிதையில் மால் களிறுக்கு உவமையாகி முல்லை நிலத் தலைவனுக்கு இறைச்சிப்பொருளாய்ச் சுட்டப்படுவது இன்றியமையாத குறிப்பாகும்.

எருதின் மீது பாயும் தலைவனுக்கு மால் ஒப்பாவான் என்றும் (கலி.104:35-38) தலைவனைப் பிரிந்திருந்த தலைவி தலைவனை அடைவது *மாயோன் மார்பில் உள்ள திருமகளை ஒக்கும்* (கலி.109:17-18) என்றும் கலித்தொகை குறிப்பிடுகின்றது.

மாயோன் : பூவை நிலையின் வெற்றி வீரன் :

பூவை நிலைத் துறையின் புகழ்நிலைக்கு உரிய கடவுளாகிய மாயோன் வெற்றி வீரனாகின்ற தலைவனுக்கு உவமையாகின்றான் . பாண்டியன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறனைப் போற்றும் முகத்தான் , *"புகழ் ஒத்தீயே, இகழுநர் அடுநனை"* (புறம். 56:13) என மாயோன் உவமிக்கப்படுகின்றான் . பிறிதோரிடத்தில்,
புகழ்தலுற்றோர்க்கு மாயோனன்ன உரைசால் சிறப்பிற் புகழ்சான் மாறா (புறம்.57:1-3)
என மன்னனது சிறப்பிற்கு மாயோனது சிறப்பு உவமையாகின்றது. இவ்வாறு முல்லை நிலத்தாரின் அகவாழ்விற்கும் புறத்திணை வீரர்களின் (அரசர்களின்) புகழுக்கும் மால் உவமையாக்கப்படுவது எண்ணத்தக்கதாகும்.
இயற்கையின் மூலபடிவ உருவினனான மாயோன் மாந்தர்தம் வாழ்வியல் கூறுகள் வழி மூலபடிவபாத்திரமாக (Archetypal Charecter) உயர்ந்தமை இன்றியமையாக் குறிப்பாகும்.

மாயோன் : காத்தல் கடவுள்:

இயற்கையின் உருவாகிய மாயோன் பற்றி குறிப்புகள், கதைத்தன்மையுடன் இணைந்து வளர்ச்சியுற்ற நிலையில் பழந்தமிழில் குறிப்பிடப்படுகின்றன. காலத்தால் பிற்பட்ட இலக்கியங்களில் அவை புராணிகத் தன்மை மிக்கிருக்கும் பான்மையில் இடம் பெறுகின்றன.

பரிபாடலில் மாயோன் முத்தொழில் புரிபவனாக முதல்முறை, இடைமுறை, கடைமுறை தொழில் எனப் படைப்பு, அளிப்பு, அழிப்பு, என்னும் தொழில் புரிபவனாக உள்ளான் (பரி.3.71) முத்தொழில் வல்லவனாக மாயோன் இருப்பினும் காத்தல் தொழில் மாயோனுக்கு உரியதாகச் சுட்டப்படுகின்றது. *"உலகாள் மன்னவ"* (பரி3.85) என்னும் *"ஒருமை வினைமேவு உள்ளத்தினை"* (பரி.13.49) என்றும் மாயோனின் காத்தல் தொழில் சுட்டப்படுகிறது. காத்தல் கடவுளாக விளக்கமுற்ற மால் உலக முதல்வனாகப் பேருரு கொண்டமையினையும் பழந்தமிழ் வழி அறிய முடிகின்றது.

மாயோன் : உலக முதல்வன் :

மாயோனாகிய திருமாலின் முழுமுதற்றன்மையினையும் அவதாரங்களையும் ஆற்றலுடைய முழுமுதற்கடவுளாக உயர்ந்தமையையும் பரிபாடல் குறிப்பிடுகின்றது. இக்குறிப்புகள் வடமொழிப் புராணமரபுடன் இணைந்து செழித்தவை என்பது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

திருமால் அனைத்துக் கடவுளாக உள்ளமையை, *"எவ்வயினோயும் நீயே"* (பரி.4:67-70) என்ற தொடர் சுட்டுகின்றது. பலராமன் , காமன் , அநிருத்தன் , பிரமன் என ஐவராகவும் மாயோன் உள்ளமையும் பரிபாடலில் (பரி 3.81-94) குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறான குறிப்புகள் வைணவப் பஞ்சராத்திரக்கொள்கையின் வளர்ச்சி என்பர் திறனாய்வாளர் (இந்திரபவாநி, சங்க நூல்களில் கிருஷ்ண வழிபாடு, ப.62)

இயற்கையின் உருவாகிய மால் நெடியோனாகி, பேருரு பெற்று கடவுளானமையும், வடமொழிப் புராணக்கலப்பால் கதைத் தன்மையுடன் கூடி வளர்ச்சியுற்றமையையும் கண்டோம். தத்துவப் பொருளாகிய நெடியோன் இயற்கையின் எல்லாப் பொருளிலும் பரந்து விரிந்து ஊடுருவிய நிலையினையும் பரிபாடலில் பரக்கக் காணலாம்.

மாயோன் அவதாரங்கள்:-

அவதாரம் என்பதற்கு மேலிருந்து கீழிறங்குதல் என்பது பொருளாகும். அவ்வாறு இறங்குதல் உயிர்களின் பொருட்டு என்றும் கூறுவர். அவதாரம் என்பதற்குத்தோற்றம் என்ற சொல்லாட்சி கையாளப்படுகின்றது.
மால் எடுத்த தோற்றங்கள்: பத்தென்பர். அவற்றுள் கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனன் , பரசுராமன் ,
இராமன் , பலராமன் , கிருட்டிணன் என எட்டுத் தோற்றங்கள் பழந்தமிழில் குறிப்பிடப்படுகின்றன.

இவை தவிர பழந்தமிழில் தொன்மை வகைமை வளர்ச்சி,பி.எச்டி ஆய்வேடு, ப.169)

மாயோன் தொன்மம்:

வளர்ச்சியும் சுழற்சியும்:- மாயோன் தொன்மம் வளர்ச்சி பெற்றுச் சுழற்சி பெற்றமையை அறியலாம். இயற்கையின் அடர் பசுமை, கானகத்தின் பரிதி நுழையாத அடர் இருள் முதலிய மூலபடிவு எண்ணங்களுக்கு மாயோன் வித்தாகின்றான் . அடர் கானகத்தின் பெரிய பரப்பிற்கும், நெடிய சார்பாக நெடியோனாகக் காடுறை கடவுளாக உயருகின்றான் . காடுரை மக்களின் அகவாழ்வாம் காதல் வெற்றிபெற வழியாகும் ஏறு தழுவும் தலைவனாய்ப் பழந்தமிழ்ச் சமூகத்தின் கூட்டு நனவிலி மனவுணர்வுகளின் உருவாகக் காட்சியளிக்கத் தொடங்குகின்றான் . அரசர்களின் புகழுக்கும் படிமமாகி. பூவை நிலை எனும் புறப்பொருளில் மையமிடுகின்றான் .

வடமொழிப் புராணக் கலப்புற்று வளர்ச்சி பெற்ற தொன்மக் கடவுளாகப்பழந்தமிழில் குறிப்பிடப்படுகின்றான் . மணிதிகழ் உருபின் மாயோன் , மூவேழ், உலகமாய்ப் பரந்தமையும் பிறவாப் பிறப்பாகவும் சிறந்து உலக முதல்வனா கின்றான் . விட்டுணுவின் தசாவதாரங்களுள் பல தோற்றங்களின் வடிவாகின்றான் . சமய தத்துவச் சார்பின் பொருண்மையாகின்றான் .
இவ்வாறு மாயோன் தொன்மம் பிறமொழி மற்றும் பண்பாட்டுக் கலப்பால் வளர்ச்சியுற்ற நிலையை உணரமுடிகின்றது.

www.prohithar.com

When is Janmashtami

Janmashtami 2009 is on August 14th(North Indians)

Janmashtami celebrates the birth of one of the most famous Gods of Hindu religion, Bhagwan Krishna, on the eighth day (Ashtami) in the month of Sravana or Savana. Lord Sri Krishna was born on the 'Rohini' nakshatram (star). It is generally celebrated in the month of August-September according to the Christian Calendar. Legend has it that Sri Krishna was born on a dark, stormy and windy night to end the rule and atrocities of his maternal uncle, Kansa.

Position of Stars at the time of Birth

It was only on the eighth day of the second fortnight, in the month of Sravana when, the moon entered the house of Vrishabha in Rohini Nakshatra (star) that Lord appeared. According to Barhapatyamana, the month of Sravana corresponds to the month of Bhadrapada Krishnapaksha. Lord was born in the year of Visvavasu, appx. 5,227 years ago.

Celebrated for over Two Days

Janmashtami is celebrated for over two days as "Rohini" nakshatra and Ashtami may not fall on the same day. The first day known as Krishnashtami, as the birth of Bhagwan Krishna falls on the eighth day after Raksha Bandhan, which generally falls in the month of August. The second day is known as Kalashtami.

Welcome the Lord at Midnight

It is only at midnight between the first and the second day that birth of Sri Krishna took place. The actual festivities begin during midnight in this 48 hour period. The celebration reaches its peak at midnight, with the birth of Lord Krishna, with lot of hymns, arti taking place and blowing of the Conch (shankh), rocking the cradle of Lord. The idol of lord is bathed with Panchamrit (A mixture of milk, ghee, oil, honey and Gangajal). The Panchamrit is later distributed as Prasad to the devotees along with other sweets. While some Fast on the first day and break it at midnight for others the fasting continues for both days. The period coincides with rainy season.

Birth of Lord Krishna

Janmashtami is celebrated to welcome and enjoy Lord Krishna's birth. The birth of Lord Krishna took place when the various planets were in auspicious places. It is said that God chooses a particular time, as to when he will take birth as a human and the planetary systems are adjusted accordingly.

Auspicious Nakshatra (Constellation)

Around the time of Bhagwan Krishna's birth, Rohini Nakshatra was predominant as it is considered to be quite auspicious. This is so because it is under the supervision of Brahma, the creator of Universe. Sri Krishna was born in the month Of Sravana more than 5000 years ago.

Born in Dwapur Yug (Iron Age)

According to some scholars, Krishna was born on Wednesday,the eighth day of second fortnight in Sravana month in the year of Visvavasu around 3227 BC, also known as Dwapur Yug. July 19th 3228 BC to be more accurate. He lived for 125 years and disappeared on February 18th 3102 BC on the new moon night of Phalguna. His death was the onset of the current corrupt age known as Kaliyug.

Universal Happiness of all Forms of Life

From the time, Devki conceived Sri Krishna, she began to glow and exude divine light. The prison walls glowed with the aura of the new born infant. Atmosphere of peace and happiness prevailed all over, Forests were all green and full of trees with all kinds of beautiful flowers, rivers were all swollen due to joy, peacocks began to dance in sheer joy, people in all villages started being happy.

Objective of Krishna's Birth

The main objective of Lord Krishna's birth was to free Mother Earth from the wickedness of demons. Playing an important part in Mahabharata (legendary battle in Kurukshetra) and propagating the theory of bhakti and good karma were other important objectives.

Events Before The Birth of Sri Krishna

www.prohithar.com

The people of Mathura were extremely unhappy with the wicked king Kansa who put his father, king Ugrasen in prison and declared himself the king of Mathura. It was to put an end to his evil ways and other demons that Lord Vishnu decided to take birth on Earth in human form. According to Akashvani (heavenly voice) at the wedding of his beloved sister Devki, Kansa got to know that the eighth child of his sister will take birth to kill him. So, in turn he rushed to kill his sister. Kansa gave up the idea of killing after being assured by Vasudev that he will handover all his children to him. He put them in Prison. Kansa killed all the six infants as soon as they were born. The seventh child (Balram) was saved due to divine intervention, when he was transferred from Devki's womb to that of Rohini's (other wife of Vasudev).

Events During the Birth of Lord Krishna

Lord Krishna was born in a prison cell in the captivity of King Kansa. He took birth in divine form with lotus like eyes, his palms bearing the signs of a lotus and discus. He had a swastika sign on his sole. Wearing a yellow colored silk cloth, adorned with precious diamond earrings and a crown made of emeralds. Soon after the birth, a chain of events astonished Vasudev, when he saw the gates of the cell flow open and all the guards fast asleep. He immediately thought of Nand , his close friend in Gokul and decided to handover his child to him in order to save him from the clutch of Kansa.

River Yamuna Bows To The Feet of Sri Krishna

The night of birth was witnessed by heavy rains which led to River Yamuna being in floods. As soon as the feet of Lord immersed in the river, the flow became normal and Yamuna made way for the Lord. Sheshnag, the serpent formed an umbrella to save the new born baby from rain.

Exchange of the Babies

Vasudev kept his child next to fast asleep Yashoda and took the baby girl lying with him back to Mathura. The baby girl is believed to be the sister of Lord Vishnu.

Disappearance of The Divine Child

On hearing the news of birth of the eighth child of Devki and Vasudev, Kansa rushed to the prison-cell and lifted the baby girl to kill her despite pleadings from Devki. However, instead of hitting the stone, the child flew up in the air and announced that the annihilator of Kansa was born and in safe hands.

Krishna later grew in Gokul and finally killed his maternal uncle, King Kansa.

Historically, Sri krishna appeared on the midnight of the 8th day of the dark half of the month of Sravana. This corresponds to July 19th 3228 BC. He exhibited His pastimes for a little over 125 years and dissappeared on February 18th 3102 BC on the new moon night of Phalguna. (His departure marks the beginning of the current age of corruption known as Kali.)

Sri Krishna's Lifetime Chart

Given here is a chronological list of Lord Krishna's lifetime achievements. Relevant aspects of Lord Krishna's life from birth to renunciation have been presented in a tabular form.

Age of Lord Krishna	Description
Birth	In the month of Sravana, around July 19th 3227 BC in a prison cell in Mathura city to Vasudev and Devki.
0 to 3 years	Lived in the neighboring town of Gokul with Nand and Yashoda, performed bal leela, including killing of demoness Putana, Trinivatra etc.
3 to 7 years	Started living in Vrindavan, Killing of Demons Bakasura, Aghasura and Dhanuka.
7-10	Lifting of Govardhan hill, played rasleelas with

www.prohithar.com

years	Gopis, Invited for a wrestling match by Kansa which results in his killing.
10 – 28 years	Lived in Mathura and protected it from many Demons. Took the lessons in all the sixty four arts from Muni Sandeepani and perfected all the arts.
29 – 125 years	Established kingdom in the city of Dwarka with Brother Balram. Married Rukmini and 16000 other princesses. Helped Pandavas win the battle of Mahabharata, explains teachings to Arjuna later written down by Rishi Vyas as Bhagwad Gita.
125th Year	Fall of Yaduvanshi dynasty due to fraternal killing. Disappearance of Lord Krishna on 18th February 3102 BC.

Chronology of Events in Lord Krishna’s Life (Traditional Calculation – Method 2)

This chronology has been decided based mainly on the Mahabharata, the Harivansh and the Bhagavat Gita. - Bharatiya Sanskrutikosh.

Period of Time		Event
Before Salivahan Shak	**Before Christ**	
3263 [the eight day (astami) of the dark fortnight of Shravan]	3185	Birth of Krishna
3244	3167	Slaying of Kansa
3241	3163	Akrur's departure to Hastinapur
3238	3160	Marriage to Rukmini
3236	3158	Birth of Pradyumna
3220	3142	Droupadi's selection of her groom (svayam var)
3218	3140	Establishment of Indraprastha
3212	3134	Marriage of Pradyumna
3210	3132	Arjuna's embaking on a pilgrimage
3198	3120	Abduction of Subhadra
3196	3118	Birth of Abhimanyu
3195	3117	The rajasuya sacrificial fire (yadnya)
3193	3115	Loss of Hastinapur in a game of dice
3180 (Margashirsha)	3101	The Bharatiya war
3180 (Phalgun)	3101	Marriage of Aniruddha
3144 (Margashirsha)	3065	Krishna's renunciation of His body (age 119 years)

www.prohithar.com

Traditional belief based on scriptural details and astrological calculations gives the date of Krishna's birth, known as Janmashtami,[29] as either 18 or 21 July 3228 BCE.[30][31][32] Krishna belonged to the royal family of Mathura, and was the eighth son born to the princess Devaki, and her husband Vasudeva. Mathura was the capital of the Yadavas (also called the Surasenas), to which Krishna's parents Vasudeva and Devaki belonged. The king Kamsa, Devaki's brother,[33] had ascended the throne by imprisoning his father, King Ugrasena. Afraid of a prophecy that predicted his death at the hands of Devaki's eighth son, he had locked the couple into a prison cell. After Kamsa killed the first six children, and Devaki's apparent miscarriage of the seventh, being transferred to Rohini as Balarama, Krishna took birth.

Since Vasudeva believed Krishna's life was in danger, Krishna was secretly taken out of the prison cell to be raised by his foster parents, Yasoda [34] and Nanda in Gokula. Two of his other siblings also survived, Balarama (Devaki's seventh child, transferred to the womb of Rohini, Vasudeva's first wife) and Subhadra (daughter of Vasudeva and Rohini, born much later than Balarama and Krishna).[35] According to Bhagavata Purana it is believed that Krishna was born without a sexual union, by "mental transmission" from the mind of Vasudeva into the womb of Devaki. Hindus believe that in that time, this type of union was possible for achieved beings.

Balu Saravana Sarma
Prohithar – Astrologer
No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677
Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

Birth Place of Lord Krishna- Mathura Virunthavan and Dwaraka Post Office Stamp



Guru		Chand Ketu	
	July 19th 3227 BC		
Chevai			Surya
	Ragu	Sukra Sani	Budha

Introduction:
With some deft computer astrology, mythic Krishna gets a date of birth, and some planetary influence

Even gods come to earth with their destinies chalked out for them. So claims astrology, at any rate.
